# அறவழி
NONVIOLENCE

வெளியீடு
அறவழிப்
போராட்டக் குழு
அஞ்சல் பெட்டி எண்: 2
சாவகச்சேரி

அறம் 1 மாதஇதழ் ※ 1986 கார்த்திகை பக்கம் 10 ※ விலை 2-00 வழி 7


## டிசம்பர் 15

## தமிழ் சிறுவர் தினமாக

## அறவழி இயக்கம் பிரகடனம்!



**பட்டி, தொட்டி எங்கும் சிறுவர் தினத்தைக் கொண்டாடப் பொதுவேண்டுகோள்!!**

ஒவ்வொரு வருடமும் டிசம்பர் 15ம் திகதியை தமிழ் சமுதாயம் "தமிழ் சிறுவர் தினமாக"க் கொண்டாடல் வேண்டும் என அறவழிப் போராட்டக்குழு பிரகடனம் செய்துள்ளது.

தமிழ் சமுதாயத்தின் நாளைய தலைவர்களாகவும். நற்பிரஜைகளாகவும் மிளிரப்போகின்ற நம் அன்புச் செல்வங்களின் வாழ்வில் நற்போதனைகளையும் நற்சிந்தனைகளையும் ஊட்டி சிறுவர்களின் ஆளுமைச் சக்தியையும் பொறுப்புணர்வையும் வளர்த்தெடுத்து அவர்களைத் தமிழ்ச் சமுதாயத்தின் எதிர்கால முன்னேற்றத்துக்கும் உயர்ச்சிக்கும் பங்காளிகளாக்கவேண்டிய பாரிய கடமை இக்கால கட்டத்தில் வாழ்கின்ற ஒவ்வொரு தமிழ்க் குடும்பத்தின் பொறுப்பாகும்.

தமிழ் சமுதாயத்தின் சிறுவர்களின் உள—உடல் —ஆத்மீக—சமூக—கல்வி— கலை —கலாசார—விளையாட்டுத்துறைகளில் அவர்களிடையே காணப்படுகின்ற திறமைகளை வெளிக்கொணர்ந்து ஆக்க—ஊக்கப்படுத்திக்கொள்ளல் மிகவும் அவசியமாகும்.

கூடவே, சமுதாயத்தில், வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழ்கின்ற குடும்பங்களில் இருக்கக்கூடிய சிறுவர்களின் கல்வித்துறை வளர்ச்சிக்கும் நாம் முக்கியத்துவம் கொடுக்கின்ற நாளாக இத்தினத்தைக் கொண்டாடுவோம்.

சமுதாயத்தில் தகுந்த வழிகாட்டல் போதனைகள் இன்றி இருக்கின்ற குடும்பங்களில் இருக்கின்ற சிறுவர்களை, பட்டி தொட்டியெங்கும் இனங்கண்டு அவ்வாறான சிறார்களின் வளர்ச்சிக்கும் வழி சமைக்கின்ற நாளாக இத்தமிழ் சிறுவர் தினத்தை முன்னெடுப்போம்.

---

**அடுத்த இதழ் அறவழி**

இதழ் 8 தமிழ் சிறுவர் தினச் சிறப்பிதழாக வெளிவரவுள்ளது. — ஆசிரியர்

---

## தமிழ் சிறுவர் தினம்

தமிழ் சிறுவர் தினத்தை டிசம்பர் மாதம் 15ம் திகதி திங்கட்கிழமை மிகவும் கோலாகலமாகக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை அறவழிப் போராட்டக்குழு செய்துவருகின்றது.

இத்தினத்தில் 25 அறவழி பாலர் கழகங்களில் கல்வி பயில்கின்ற சுமார் 800சிறுவர்

(10ம் பக்கம் பார்க்க)

---

*** தமிழர் பிரச்சனைக்கு உடன் தீர்வு காண்க! ***

# அறநோக்கில்

## நூலகங்கள்

வாசிப்பதால் மனிதன் பூரணத்துவம் அடைகிருன். வாசிப்பு மனிதனை மேலும் அறிவுள்ளவனுக்குகின்றது. மக்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கத்தினை ஏற்படுத்த தமிழ் பிரதேசங்களில் இருக்கின்ற அத்தனை கிராமங்களிலும் நூலகங்கள் அமைக்கப்படவேண்டியது முக்கியமானதும் இன்றியமையாததுமான பணிகளில் முதன்மை பெறவேண்டும்.

உலகில் இருக்கின்ற வளர்முக நாடுகளில் இயங்குகின்ற நூலகங்கள் அங்கு வாழ்கின்ற மக்களின் அறிவுப்பசிக்கு நல்ல தீனியை நாளாந்தம் வழங்கி வருகின்றன. ஆதலால் மக்கள் மத்தியில் வாசிக்கும் பழக்கம் தினம் தினம் பெருகிவருவது மிகவும் கூர்மையாகக் கவனிக்கப்படக்கூடியதொன்ருகும்.

ஆனுல், எம்மத்தியில் வாசிப்புப் பழக்கத்தினைத் திருப்திகரமாக நிறைவேற்றும் பணிக்கு உதவ போதியளவு நூலகங்கள் இல்லாமல் இருப்பது மிகவும் கவலைக்குரியதாகும்.

எம்பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் சில கிராம நூலகங்களில், மிக மிகக் குறைவான நூலகங்கள்தான் ஓரளவு இப்பணியில் நிறைவினை ஏற்படுத்திவருகின்றன எனக் கூறலாம்.

ஆனுலும் எம்மக்கள் தொகைக்கேற்ப நூலகங்கள் போதாது என்பதை எல்லோருமே ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களாகவுள்ளோம்.

ஆலயம் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என எமது முன்னேர்கள் கூறிய வாக்கினை நாம் நினைவு கொள்வோம். ஆலயங்கள் கிராமத்துக்கு கிராமம் தோன்றியிருக்கின்றன. ஆனுல், எம் கிராமங்களில் நூலகங்களின் தேவைகள்பற்றி நாம் விசேடமாகச் சிந்திக்காமல் இருக்கின்ருேம்.

எனவே, கிராமத்தின் கண்களாக விளங்கக்கூடிய. நூலகங்களை, கிராமங்களில் ஏற்படுத்தி, மக்களின் சமூக — கல்வி, அரசியல், வெளியுலகு அறிவினை வளர்க்க முன்னின்று உழைத்தல் முக்கியமானதாகும்.

இக்கட்டத்தில், பல லட்சம் பணத்தினை முதலீடாக்கி நூலகங்களையும், சனசமூகநிலையங்களையும் கட்டி, அவற்றினைச் சரியான வகையில் கிராம மக்களுக்குப் பயன்படாமல் (பெரும்பாலான) நிலையங்கள் எம்பிரதேசத்தில் இருக்கின்றன என்பதை அறியும்போது மனத்துக்கு வேதனையாகவுள்ளது.

இந்நிலைகளை மாற்றி, கிராம மட்டத்தில் நூலகங்களை அமைத்து கிராம மக்களின் அபிவிருத்திக்கு உழைத்தல், இந்நெருக்கடி மிக்க காலகட்டத்தில் தமிழ்மக்கள் அனைவரதும் கடமையாகும் என்பதை **அறவழி** வலியுறுத்த விரும்புகிறது.

---

## டிசம்பர் 10 கரிநாள்

ஐக்கியநாடுகள் சபையினுல் பிரகடனப்படுத்தப்பட்ட டிசம்பர் 10ம் திகதி மனித உரிமைகள் தினம். இத்தினத்தினைத் தமிழ்மக்கள் கரிநாளாக அனுஷ்டித்தல்வேண்டும் என அறவழி வேண்டுகோள்விடுக்கின்றது.

தமிழ் மக்களின் மனித உரிமைகள் மதிக்கப்படுகின்றனவா?

---

## திருமலை
### அகதிகளுக்கான உதவி

திருமலை, சாம்பல்தீவு, உப்புவெளி போன்ற இடங்களில் இடம்பெற்ற அரச பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டு, அங்கிருந்து படகுமூலம், முல்லைத்தீவு வழியாக யாழ் பிரதேசந்துக்கு வந்து எவ்வித உதவியும் இன்றி இருக்கும் அகதிக்குடும்பங்களுக்கு குழு உணவுப்பொருட்களை வழங்கி வருகின்றது.

இத்திட்டத்தின்மூலம் இதுவரை 250க்கு மேலான குடும்பங்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

# தலைமைத்துவம்

சி. எஸ். சுப்பிரமணியம்
( வளர்ந்தோர் கல்வி அதிகாரி )

தலைமைத்துவம் என்பது ஒரு மனித இயல்பூக்கமாகும். ஒரு குழுவில் அல்லது கிராமத்தில் அல்லது கூட்டத்தில் ஒருவர் தன்னுடைய திறமையால் அல்லது பலத்தால் ஏனையவர்களுக்கு தலைமைதாங்க முற்படுவர். மனிதன் குடும்பங்களாக இணைந்து வாழத் தொடங்கிய வரலாற்றுத் தொன்மையான காலமிருந்து அந்தத் தலைமைத்துவம் வளர்ந்து வருகிறது. ஒரு குடும்பத்துக்கு ஒருவன் தலைமை தாங்குகிறான். அவ்வாறே பல குடும்பங்களுக்கு ஒரு தலைவன் தோன்றுகிறான். தலைமை தாங்குவதற்கு பல இயல்புகள் அவசியமாகிறது. தேகபலம், மனோபலம், தீர்மானங்கள் விரைவில் எடுக்கும் திறமைபோன்ற இயல்புகள் இருப்பவன்தான் ஒரு தலைவனாகிறான்.

மனோதத்துவத்தின் படி ஒருவர் தன்னை முன் வைத்தல் அல்லது தன் சிறப்பை வலியுறுத்தல், என்பது ஒருவருடைய இயல்பூக்கமாகும். சமூகத்தில் ஒரு சிலரே இந்தக் குணமுடையவர்களாகப் பிறக்கின்றார்கள். இவர்கள் தங்களை பலருள் ஒருவராக வைத்திருப்பதில் திருப்தியடைவதில்லை. மற்றவர்களுக்கு முன்னோடிகளாக இருக்க விரும்புவர். இந்தக் குணம் இறுமாப்பு, கர்வம் என்ற குணத்தால் உந்தப்படுகிறது. இந்தக் கர்வம் என்ற குணம் எம்முள் இருந்து எம்மை ஊக்குவிக்கும் போதுதான் நாம் முன்னேறவேண்டும் எமது பெயரை நிலைநாட்டவேண்டும், உலகத்தில் பெயரும் புகழும் பெறவேண்டும் என்று செயலாற்றுவோம்.

சிறுகுழந்தையிலிருந்தே இந்தத் தலைமைத்துவம் வகிக்க விருப்பும் குணம் வெளிப்படையாகத் தெரியும். குழந்தை தனது அழுகையால் தா விரும்பும் விடயங்களைப் பெறுவது இந்தக் குணத்தின் பிரதிபலிப்பாகின்றது.

அடுத்த பருவத்தில் குழந்தை எல்லோருடைய கவனத்தையும் ஈர்ப்பதற்காகவும் தான் மிகவும் முக்கியமானவர் என்பதைக் காட்டவும், பலவித குறும்புகளையோ, தீரச் செயல்களையோ செய்கின்றது. ஆசிரியர்கள், பெற்றோர் பிள்ளைகளின் இந்த தற்பெருமை அல்லது கர்வத்தை நல்லமுறையில் பயன்படுத்தி தலைமைத்துவ இயல்புகளை வளரச் செய்யலாம்,

சில பிள்ளைகள் தங்களுடைய உடல் பலத்தை உபயோகித்து விளையாட்டுத்துறையில் வீரச்செயல்கள் புரிந்து மற்றப்பிள்ளைகளுள் தாம் சிறந்தவர்கள் என்பதை நிலைநாட்டுவார்கள். வேறு சிலர் தங்களது புத்திக் கூர்மையால் தலைமைத்துவம் தாங்க முற்படுவார்கள். இவர்கள் கணித அல்லது விஞ்ஞான அல்லது கலையியல் துறையில் மேதைகளாக விளங்கி சமூகத்தில் தமக்கென்று ஒரு தலைமையிடத்தைதேடிக்கொள்வார்கள்.

சில பிள்ளைகள் ஏனைய கருமங்களில் மட்டமாகவோ சாதாரணமாகவோ இருந்தபோதிலும் தமது சகமாணவருள் தலைமை தாங்க விரும்பி முன்வருவார்கள். இதுவும் ஓர் இயல்பூக்கமாகும்.

பொதுவாக எல்லா மனிதர்களுக்கும் தங்களதுஇளம்பராயத்தில் இயல்பாகவே முன் நிற்க வேண்டும், தலைமைதாங்கவேண்டும் என்ற மனோ நிலை உள்ளது. இந்த விருப்பத்தை பல நல்ல அல்லது தீயவழிகளில் செயல்மூலம் பிரதிபலிப்பார்கள். சமுகத்திலுள்ள ஆசிரியர் பெற்றோர் ஏனையோர், இவர்களினது செயல்களை நல்ல வழிப்படுத்தி ஊக்கமளிக்கும்விதத் தலைமைத்துவம் என்ற குணம் வளரும்.

நவீன உலகில் தலைமைத்துவம் என்பது மிக முக்கியமான இடத்தைப்பெற்றுள்ளது. மக்கள் சமுதாயத்தை இணைத்து முன்னேற்றுவதற்கு தலைமைத்துவம் இன்றியமையாதது. பண்பாட்டு வளர்ச்சியாலும் உலகத்தில் செல்வ வளர்ச்சியாலும் மக்கள் இணைந்து வாழுதலை விடுத்து, தனித்துவம் பெற்று முன்பு கூட்டுச்சமுதாயமாக இருந்த மக்கள் தற்போது தனிமனிதர்களாக பிரிந்துசெல்கிறார்கள் இதனால் போட்டியும் பிரச்சனைகளும் எழுகின்றன. மனிதன் ஒவ்வொருவனும் தான் செல்வத்தைப் பெருக்கவும் சுயநலமாக தன் சௌகரியங்களை கவனிப்பதில்மட்டும் ஈடுபடுகிறான். இவ்வாறான மக்களை ஒருங்குசேர்த்து வழி நடத்த தலைமைத்துவம் முக்கியமாகிறது.

ஒரு நல்ல தலைவர் ஒவ்வொரு துறையிலும் இருந்தால் நாட்டுக்கு மிகவும் சிறப்பாகும். அரசியல், சமூக, ஆத்மீக பொருளாதாரத் துறைகளில் தனித்தனி தலைவர்கள் தோன்றி சமூகபலத்தைஇணைப்பது மிகஅவசியமாகிறது. நவீன காலத்தில் தலைமைத்துவம் புதுக்கருத்தாக செயல்படுகிறது. ஒரு தலைவன் சமமானவருள் முதவராக திகழுகிறான். தலைவனுடைய கடமை. இணைத்தல், திட்டமிடல். ஊக்கமளித்தல், முன்னேற்றல். மதிப்பிடல் போன்றவை. இவைகளை முன்போல் சர்வாதிகார முறைப்படி ஒருவர் தானாக செயலாற்றாமல் சனநாயக முறைப்படி எல்லோருடனும் தானும் ஒருவராக இருந்து கருமமாற்றவேண்டும். ஆபிரிக்கா கண்டத்திலும், வேறு சில

( 8ம் பக்கம் பார்க்க )

# சித்த வைத்தியம்

தர்மினி

சத்திர சிகிச்சைமூலம் மனிதர்களின் அவயவங்களை மாற்றவும், கண் குருடானவர்களுக்கு வேறு மனிதரின் கண்களை எடுத்துப் பொருத்தி கண் பார்வையைக் கொடுக்கவும், இருதயத்தில் பழுது ஏற்பட்டால் செயற்கை இருதயம் பொருத்தி மனிதனை வாழவைக்கவும் முன்னேறியிருக்கும் மருத்துவத் துறைக்கு வித்திட்ட எமது சித்த வைத்தியம் இன்றும் இலைமறையாக இருந்து வருகிறது. பல்லாயிரம் வருடங்களுக்கு முன் சித்த வைத்தியர்கள் ஞானிகள் போன்றோர் செய்த மிகவும் வெற்றிகரமான முடிவே சித்த வைத்தியம் ஆகும்.

ஜீவராசிகளுக்கு ஏற்படக்கூடிய நோய்களையும் அவற்றைக் குணப்படுத்தும் மருந்துகளையும் இவர்கள் அலசி ஆராய்ந்து கூறியுள்ளார்கள், ஆராய்ச்சிக் கேற்ற கருவிகள் இல்லாத போதிலும்கூட தம் சிந்தனையாலும் சித்தர்கள் மூலிகைகளையும் மருந்துச் சரக்குகளையும் வைத்திய நூல்களில் தொகுத்துள்ளார்கள். தம் ஆராய்ச்சியின் முடிவுகளை தமது சிஷ்யர்களுக்கு உபதேசித்து வந்தார்கள். இவ் சித்த வைத்திய துறையில் தேர்ச்சி பெற்று தம் சந்ததியினருக்கும் ஏனையோருக்கும் இதனைப் போதித்து வந்தார்கள். ஆகவேதான் இவ்வைத்தியம் பரம்பரை வைத்தியம் என்றும் வீட்டு வைத்தியம் என்றும் கூறப்பட்டு வருகின்றது.

மனிதருக்கு ஏற்படும் நோய்களைக் கையில் உள்ள நரம்பில் பிடித்துப் பார்த்து அறிந்து கொள்ளும் முறையை பதினெண் சித்தர்கள் விபரமாக பாடியுள்ளார்கள்.

மனிதனுக்கு ''4448'' நோய்கள் உண்டென்பதை கண்டுபிடித்து நோய்களின் பெயர்களையும் அந்நோய்களால் பீடிக்கப்படுபவர்களுக்கு ஏற்படும் குணங்குறிகளையும் மிகவிரிவாக விளக்கி கூறியுள்ளார்கள். X கதிர்மூலம் கண்டுகொள்ள வேண்டிய நோயை சித்த வைத்தியர் கையில் உள்ள நாடியைப் பிடித்துப் பார்த்தே கூறிவிடுவார்கள். 4448 நோய்களுக்கும் மருந்துகள் கூறப்பட்டுள்ளது. செந்தூரங்கள், பஸ்பங்கள், கட்டு வகைகள் போன்றன பலவருடங்கள் அவற்றின் குணங்குன்றாது இருக்கும் மருந்துகளாகும். இவை பல நோய்களைக் குணப்படுத்த வல்லவையாகும்.

சில நோய்களுக்கு உடன் தயாரித்துக் கொடுக்க வேண்டிய மூலிகை கசாயங்களும் சியாழுங்களும் இருக்கின்றன. தயாரிக்கப்பட்ட நாளில் இருந்து சில மாதங்கள் வரையுமே பிரயோகிக்கக்கூடிய சூரணங்களும் மாத்திரைகளும் பெரும்பாலும் கூறப்படும்,

சித்த வைத்தியத் துறையில், நோய்களை உடன் குணப்படுத்தும் மருந்துகள் இல்லை என ஒரு தப்பான அபிப்பிராயம் நிலவுகின்றது. நோய்களை உடன் குணப்படுத்தும் மருந்துகள் அனேகம் உண்டு, நோயின் குணம் அறிந்து அந்நோய் குணப்படும்போது நோயாளியின் உடலில் ஏற்படும் தாக்கத்தால் வேறு நோய் ஏற்படாதிருக்கும் பொருட்டு மனிதனிடம் இருக்கும் நோயை வேரோடு களைவதற்கேற்ற மருந்தையே சித்த வைத்தியர்கள் செய்துவருகின்றார்கள்.

நோயைப் படிப்படியாகக் குணப்படுத்த வேண்டும் என்றும் சித்த வைத்தியர்கள் கையாண்டுவருகிறார்கள்.

சத்திர சிகிச்சைமூலம் குணப்படுத்த வேண்டிய நோய்களை சித்த மருந்துமூலம் தீர்த்துக் கொள்ளமுடியும் என்பதில் சந்தேகமில்லை. செந்தூரம், அகத்தியர் குழம்பு போன்ற மருந்துகள் பல்லாயிரக்கணக்கான நோய்களைக் கண்டிக்கும் ஆற்றல் உடையவை. விசர் நாய்க்கடிக்கு மேல் நாட்டு வைத்தியர்கள் 40 ஊசி போட்டு குணப்படுத்துகிறார்கள். சித்த வைத்திய மருந்தைக் கொண்டு இலகுவாக விசர் நாய்க்கடிக்கு மருந்து செய்துகொள்ளமுடியும் என்பதை சித்த வைத்திய நிபுணர்கள் விரிவாகவும் ஆராய்ச்சியின் மூலமும் கூறுகின்றார்கள்.

இரசாயன மாற்றங்கள்பற்றி சித்த மருத்துவ முறையில் பல உதாரணங்கள் காணக்கூடியதாக உள்ளன, மருந்து சுத்திகரிப்பில் தவறு ஏற்பட்டால் ஆக்கப்படும் மருந்துகள் யாவும் நஞ்சாய்ப் போய்விடும். இதற்கு ஒரு உதாரணத்தைமட்டும் எடுத்துக் காட்டலாம். காய்ச்சல், சுரம், முறைக்காய்ச்சல் நோய்களுக்கு ''கௌரி'' மாத்திரையை வைத்தியர்கள் பிரயோகிக்கின்றார்கள். இதனால் நோயாளிகள் பூரண குணமடைந்துவிடுகிறார்கள். ஆனால் இம் மாத்திரை கௌரிபாஷனத்தில் இருந்து தயாரிக்கப் படுகின்றது. ''பாஷனம்'' என்ற பெயரே நஞ்சு என்பதைக் குறிக்கின்றது.

இதைச் சித்த முறைப்படி சுத்திகரித்துவிட்டால் நன்மை பயக்கும் ஓர் அமிர்தமாக மாறிவிடும். பாஷணங்களை இரசாயனத்தாக்கங்கள் மூலம் அமிர்தமான மருந்துகளாக்கும் முறைகள் சித்த வைத்தியத்தில் அனேகம் உண்டு.

சித்த வைத்தியம் முன்னேற்றம் அடைவதற்கு மூலப்பொருட்கள் தேவை. இந்தப்பொருட்களை எமது கிராமங்களிலும் பொது இடங்களிலும் இலகுவாகப் பெறமுடியும். ஒரு வீட்டிலே குறைந்தது ஒரு மூலிகையாவது இருக்கும். இந்த மூலிகைச் செடிகளின் மகத்துவத்தை புரியாதவர்கள் பலருண்டு. வீட்டிலும் போது இடங்களிலும் இருக்கும் மூலிகைச் செடிகளையும் மரங்களையும் அழிக்காதவாறு பாதுகாப்பது ஒவ்வொரு மனிதனும் செய்யவேண்டிய தலையாய கடமையாகும்.

(7ம் பக்கம் பார்க்க)

# சுதந்திரம் வேறொருவர் கொடுப்பதல்ல!

— வீரமகள்

சுதந்திரம் வேறொருவர் கொடுக்கப் பெற்றுக்கொள்ளும் பொருளல்ல. அது சுக்கு மல்ல, மிளகுமல்ல. நாட்டு மக்களின் வீரத்தாலும், தியாகத்தாலும், விடாமுயற்சியாலும் மக்களடையும் ஓர் உன்னத நிலை தான் சுதந்திரம். உலக சரித்திரத்தை எடுத்துப்பார்த்தால் சுதந்திரப் போராட்டம் நடத்திய எவ்வினமும் பலவீனமான இனமாகவே இருந்தது என்பது புலப்படும். பலம் குறைந்த நேரத்தில் தானே ஓர் இனம் தன் சுதந்திரத்தை இழப்பது. அவ்விதம் இழந்த இனம் தன் பலவீனத்தைப் பாராட்டிக்கொண்டு சுயாதீனப் போராட்டத்தில் இறங்காமல் நிற்குமாயின் விடுதலை எப்போ அடையும்! விடுதலைஅடைந்த ஒவ்வொரு இனத்தின் சரித்திரத்தையும் ஆராய்ந்தால் அவ்இனம் தன் மனோதிடத்திலேயே வெற்றியடைந்தது.

அடிமைத்தனத்தில் இருக்கும் மக்கள் சுதந்திரத்தை அடைவதற்கு 'இருஅம்சங்கள் ஒன்றாக அமையவேண்டும். ஒன்று அம்மக்களின் சுயாதீன வேட்கைப் பெருக்கமும் அதற்காகச் செய்யும் முயற்சியும். மற்றது உலக நடவடிக்கைகளால் வந்தேற்படும் சந்தர்ப்பம். கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டாக சுதந்திரப்போர் நடத்திக்கொண்டிருந்த இந்தியாவிற்கு இரண்டாவது மகாயுத்தம் முடிவடையும் காலமே சுதந்திரத்தைப் பெறுவதற்கு ஏற்ற சந்தர்ப்பமானது.

எமக்குச் சுயாதீனம் அடைவதற்கு சந்தர்ப்பம் வந்து சேரும் அச்சமயத்தை வெற்றித்தினமாக்குவதற்கு நாம் முழு ஆயத்தமாக இருக்கவேண்டும். சுதந்திரம் வேறொருவர் கொடுப்பது அல்ல. வானத்தில் இருந்து விழும் என்று காத்திருப்பதும் தவறு. நாம் அதற்காக உழைப்பவர்களாக இருத்தல் வேண்டும்.

---

# காந்தியக் கல்வி முறை

( முன் தொடர்ச்சி )

பாடசாலைகளை கற்பித்தல் நடைபெறும் இடம் என்பதைவிட அதை ஒரு சமுதாயம் என்றும் பெரிய சமுதாயமொன்றைக் கட்டியெழுப்ப உதவும் ஸ்தாபனம் எனவும் கூறலாம். ''சமூகத்தின் அபிலாஷைகளே பள்ளிக்கூடங்களிலும் பிரதிபலிக்கவேண்டும், அரசியலினதல்ல'', பாடசாலைகள் கிராமிய வேலை நிலையங்களாகும்.

''சீவனத்திற்குமட்டும் கல்வியல்ல, சீவியத்திற்கே'' இக்கூற்றுக்கள் காந்தியினதல்ல, நேசையா அவர்களுதே.

சேவகிராமில் நடைபெற்றுக் கொண்டிருந்த, காந்தியடிகளால் ஏற்படுத்தப்பட்ட ''வாழ்க்கை முறையை வாழ்ந்தே கற்கும் விதத்தை'' அவதானித்த திரு. நேசையா அவர்கள் இலங்கை மக்களுக்கு எழுதிய தன் சமூகக் கல்விப் புத்தகத்தில், எவ்வாறு பல செயல்திட்டங்கள்மூலம் கருத்துள்ள சமூகக் கல்விப் பாடம் கற்பிக்கமுடியும் எனக் காட்டி, இவ்வாறான உண்மையான வேலையாலும், உண்மையான சேவையாலும் பிள்ளைகள் வாழக்கற்பதுமட்டுமல்ல வாழ்கிறார்கள் எனக் காட்டியுள்ளார்.

பேராசிரியர் நேசையா பெற்ற பிள்ளைகள் நான்கைப்பற்றிய கவலையெதுவும் அவருக்கு இப்போது இல்லை, ஆனால் அவருக்கு இலட்சியக் குழந்தைகள் பலவுளர். அவர்களைப்பற்றித்தான் இவருக்கு இப்போ கவலை. அதோடு அளவற்ற அக்கறையும் கூட. அவற்றுட் சில

1. நூலக சேவை 2. கூட்டுறவு இயக்கம் 3. சமூகக் குறைபாடுகள் 4. வலுவிழந்தோரின் வருங்காலம் என்பனவாம். அவருக்கு வலுவிழந்தோரின் வருங்காலத்தைப்பற்றிய கரிசனைபற்றி "The Ceylon Churchman" என்கிற சஞ்சிகையில் "Loosening dumb tongues and opening closed Eyes" என்ற தலைப்பில் இவரால் எழுதப்பட்ட கட்டுரையை வாசித்தவர்கள் நன்குணர்வர். இக்கட்டுரையின் இறுதியில் விசேடமாகத் தமிழ்ப்பகுதிகளில் அவசியம் கவனிக்கப்படவேண்டிய, ஆனால் பராமுகமாய் விடப்பட்ட ஒரு ஏழு அம்சத்திட்டத்தை வைத்துள்ளார். இதன் அடியில் பிரசுரிப்பாளர்கள் கூறியது என் மனதைத் தொட்டது;

"We commend this excellent article written by one of our most distinguished contributors to whom both Sri Lanka and the Church owe much for his grand vision and wise counsel. Thank you Mr. Nesiah and God Bless yon"

( தொடரும் )

# நம் ஆற்றலின் சக்தி

— ஜீவன்

நமது ஆற்றலைப் பயன்படுத்தப், பயன்படுத்த அது ஆலமரம்போல விழுது விட்டுக்கிளைகள் செழித்து விரிந்து வளர்ந்து ஓங்கும். முன்னேற்றம் காண இந்த முறைகள் மிகவும் உதவியாக இருக்கும். ஆணியை உள்ளே இறக்க ஒருமுறை அடித்தால் போதாது; பல முறைகள் ஓங்கி அடிக்கவேண்டும்,

நாம் எடுக்கின்ற செயலை ஆர்வத்தோடும் பொறுப்புணர்வோடும் செய்துமுடிப்பது சிறப்பு. செய்துமுடிக்கும்வரை தயக்கம், பயம், பரபரப்பு கொள்ளக்கூடாது. செய்கின்ற செயல் எதுவாக இருந்தாலும் திருத்தமாகவும் பொருத்தமாகவும், திருப்தியாகவும் செய்துமுடிக்கவேண்டும். செய்கின்ற செயலில் ஏனோதானோ என்ற மனப்பாங்கு இருக்கக்கூடாது.

ஒரு நேரத்தில் ஒரு செயலில்மட்டும் கவனம் செலுத்தி அதை ஒழுங்காகச் செய்துமுடிக்க முயல வேண்டும், குறிப்பிட்ட செயல்களில்மட்டுமே நாம், எமது நேரத்தையும் திறமையையும் செலவழித்து, அவற்றைச் சரியாகச் செய்து முடிக்கவேண்டும்.

வெற்றி பெறுவதற்கு வேண்டிய தேவையான வற்றை எல்லாம் மறந்துவிடாமல், கவனம் மிகக் கொண்டு செயலைச் செய்வது முக்கியம். வாழ்க்கையில் கிடைக்கும் வாய்ப்புக்களை ஒன்றுகூட நழுவவிடாமல் முழுவதையும் பயன்படுத்தி வாழ்வில் வெற்றிபெற வேண்டும்.

உலகிலுள்ள ஒவ்வொருவருமே வாழ்வில் உயர முடியும். தாழ்வுற்று, வறுமை மிஞ்சி.பாழ்பட்டுக் கிடந்தாலும் மனிதன் பார்புகழும் அளவுக்கு உயரமுடியம்.

நேரமும்—காலமும் முயற்சியும் உறுதியும் திட்டமும் முன்னேறுவதற்கு மிகவும் தேவை. வாழ்வில் உயர்ந்த நிலையை எட்டிப்பிடிக்க கொண்ட குறிக்கோளிலே கவனமும், செயல் முடியும்வரை விடாத உறுதியும் இருந்துவிட்டால்—மனிதன் முன்னேறுவது உறுதி.

எந்த இன்னல் வந்தாலும், எவ்வளவு காலம் பிடித்தாலும் வாழ்வில் முன்னேற முனைந்துவிட்டால், முழுவெற்றி பெற்றுவிடமுடியும். எந்த இடையூறும் இடைமறிக்க முடியாது.

இவ்வுலகத்திலுள்ள ஜீவராசிகளில் நாம்தான் ஆண்டவனுடைய அருளினால் பகுத்தறிவு படைத்த மனிதராகக் காட்சியளிக்கிறோம். இதுமட்டுமன்றி இயற்கையிலேயே உபயோகப்படும் பல பொருட்களும் நமக்காகவே உருவாக்கப்பட்டிருக்கின்றன.

இவைகளைப் பயன்படுத்தி வெற்றியும் முன்னேற்றமும் அடையமுடியும். நம்மிடம் யானையின் வலிமையும், சிங்கத்தின் துணிவும் இருக்கும்பொழுது எப்படி வெற்றி பெறாமல் இருக்கமுடியும். உயர்ந்துவிட, துணிந்துவிட்ட பின்பு வேறு எதுவும் நம்மை உருக்குலைத்துவிட முடியாது. பசி, துயரம், தொல்லை அருகே வாராது.

பயம் இல்லாதிருப்பது — தெளிந்தமனம்— நல்லெண்ணம், புலனடக்கம், அன்றாட காரியங்களை முறைப்படி செய்வது, கடமையைத் திருப்திகரமாக, விசுவாசமாகச் செய்வது இவையாவும் நம் முன்னேற்றத்துக்குத் தூது செல்லும் தூதர்களாகும்.

நம்முடைய மேன்மையான குறிக்கோள், வாழ்க்கை முறை, செயல்திறன், இவைகளைப் பொறுத்துத்தான் வெற்றியின் இயல்பும் மாறும்.

பகுத்தறியும் சக்தியின் அடிப்படையிலேயே வாழ்க்கையை பயனுள்ளதாக ஆக்கிக்கொள்ள முடியும். இந்த சக்தி வளர்வதற்கு நம் அறிவு காரணமாக அமைகிறது. அறிவு வளர்ச்சிக்கு, முயற்சியும் பயிற்சியும் வேண்டும்.

வாழ்வில் பயன்தரும் ஆசையே செயலைத்தூண்டும். திரும்பிப் பார்க்கச் சொல்லாது. எடுத்த முடிவை நிறைவேற்றி முன்னேறிப் போகச்சொல்லும். கடிகாரத்தில் கழியும் ஒவ்வொரு வினாடியும் ''முன்னேறு—முன்னேறு'' என்று அறிவிப்பு விட்டுக்கொண்டே இருக்கிறது.

எடுத்த செயலிலே கருத்தும், காலத்திலே கவனமும் தேர்ந்த தெளிந்த வழியிலே உறுதியும் கொண்டு, இணக்கம்—கூட்டுறவு—முயற்சி ஆகியவற்றில் பற்றும், விசுவாசமும் வைத்து அசைக்க முடியாத நம்பிக்கையோடு—நேரத்தை உடும்புப் பிடியாகப் பிடித்து, திட்டத்தை நிறைவேற்ற வாய்ப்பை எதிர்பார்த்துக்கொண்டே இருத்தலிலும்—மேற்கொள்ளும் முயற்சியிலும் கவனம் செலுத்தி அதை முடிக்கும்வரை அயராது இருந்து செயற்பட்டால் வெற்றி அடைவது உறுதி.

உள்ள வலிமையும்—உண்மையில் பற்றும் உற்சாகமாகச் செயலில் ஈடுபடும் திண்மையும் சேர்ந்தவர்களுக்குத்தான் வாழத் தகுதியுண்டு. வாழ்வில் வெற்றி உண்டு என்றுஉற்சாகம் ஊட்டுகிறார் பாரதியார்!

நம்முடைய செயலில் உற்சாகம் கூடிவிட்டால் செய்கின்ற வேலையில், பளு தெரியாது; அலுப்பும் தட்டாது. உற்சாகமுள்ள உள்ளத்தில் உயர்த்துடிப்பு இருக்கும். உறுப்புகள் களையில்லாமல் பணிசெய்யும் சோர்வு கிட்டே வராது. வலிவு ஏறும் உடலில், வனப்பு மிகும். முகத்தில் வாழ்வில் இன்பம் கொழிக்கும்.

வாழ்க்கையின் பாதையை வகுத்துக்கொண்டு வாழ்ந்த பலர் வெற்றி பெற்று இருக்கிறார்கள். வெற்றி பெற்றவர்கள் உண்மையில் ஒரே பாய்ச்சலில் அந்த இடத்தை அடைந்துவிடுவதில்லை. காலத்துடன் போராடி—கண்ணுறங்காமல்—தம் கொள்கையில்—லட்சியத்தில்—அக்கறை கொண்டு, தம்முள் இருக்கின்ற ஆற்றலின் சக்திகளை வளர்த்தே வெற்றி பெற்றார்கள்.

# "சட்டமும் சமுதாயமும்"

சட்டத்துறை வளர்ந்து
சமுதாய வேலி தன்னை
சற்றேனும் மாற்றவில்லை
சன்மானம் குறையவில்லை

சாதிமத பேத மெலாம்
சன் மார்க்க நடைபோட
சீதனங்கள் சீர் பெற்று
சிங்காரப் பவனி வரும்

பெண்ணை பொருள் கேட்டதனல்
தன்னை விலை பேசிடுவார்
தன்மைகளை சட்டம் கொண்டு
தகர்த்தெறிய வழியுமில்லை

பட்டங்களைக் கூட்டி யிவர்
பல லட்சம் பணம் கேட்டு
பகல் கொள்ளை யடிப்பதனை
பறித் தெடுக்க சட்டமில்லை

தணிக்கை களில் சிறையிருக்கும்
பத்திரிகா தர்மங்களின்
பரிதாப இருட்டடிப்பை
பகலாக்க சட்டமில்லை

பெண்ணுரிமை சாசனத்தில்
பேச்சுரிமை வாய் மொழியில்
பெற்றதெல்லாம் வீண் பெருமை
உற்ற பயன் யாதுமில்லை

சிந்தை தனில் சிறையிட்ட
சித்திரங்கள் வாழவில்லை
செல்லரித்த மானுடத்தை
சீர்திருத்த சட்டமில்லை.

—செல்வி சிவராணி சுப்பிரமணியம்,
சட்டத்தரணி.

(நன்றி—நீதிமுரசு)

## விடுதலையும் அன்பும் ஒன்றுகவே

விடுதலையும் அன்பும் ஒன்றுவே செல்லும். அன்றின் பிரதிபலிப்பன்று. நீ என்னை நேசிப்பதனல் நான் உன்னை நேசித்தால் அது வெறும் வர்த்தகமே. அது சந்தையில் வாங்கவேண்டிய ஒன்று. அன்பல்ல. அன்பு ஒன்றையும் எதிர்பார்க்காது. அந்த அன்பிலேயே விடுதலையை உணரமுடியும்.

## கிராமியக் கலந்துரையாடல்

அறவழிப் போராட்டக்குழு பணிபுரிகின்ற கிராமங்களில் இருக்கின்ற மக்களது பிரச்சனைகள், தேவைகளை நேருக்கு நேர் அறியும் பொருட்டும் கிராம மக்களுடன் நெருங்கிய உறவினை வளர்க்கும் பொருட்டும் அறவழிப்போராட்டக்குழு கிராமிய கலந்துரையாடல்களை இம்மாதம் முதல் நடாத்திவருகின்றது.

இவ்வாறன கிராமிய கலந்துரையாடல்களில் அறவழி பாலர் முன்னேடிப் பாடசாலைப் பெற்றேர்கள், நலன் விரும்பிகள் மற்றும் ஆதரவாளர்கள் பங்கு கொள்கின்றனர்.

## அறவழி கொடித்தினம்

அறவழி ஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்ட மாசி மாதம் 25ம் திகதியினை, ஒவ்வொரு வருடமும் அறவழி கொடித்தினத்தினை தமிழ்பிரதேசத்திலும், தமிழ் அன்பர்கள் ஆதரவாளர்கள் வாழ்கின்ற மேற்குலகு நாடுகளிலும் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளைக் குழு செய்துவருகின்றது.

இக்கொடித்தினம்மூலம் திரட்டப்படுகின்ற நிதியினைக்கொண்டு, தமிழ்ப்பிரதேசத்தில் ஆக்கபூர்வமான நிர்மாணிப்பணித்திட்டங்களையும் மற்றும் கல்வி, பொருளாதார திட்டங்களையும் நடைமுறைப்படுத்தவிருப்பதாகவுள்ளது.

## விளையாட்டுப் போட்டிகள்

அறவழி பாலர் கழகங்கள் இம்மாதத்தில் தத்தம் பாடசாலைகளுல் விளையாட்டுப் போட்டிகளை நடாத்தி வருகின்றனர்.

இதுவரை பல பாடசாலைக் கிராமங்களில் இவ்வாறன கவிளையாட்டுப்போட்டிகள் நடைபெற்றுமுடிந்துள்ளன. இவ்வாறன திட்டங்கள்மூலம் கிராமிய மக்களிடையே ஒத்துழைப்பையும் புரிந்துணர்வினையும் கூட்டுறவு மனப்பான்மையையும் வளர்க்க உதவிபுரிகின்றனர்.

## சித்த வைத்தியம்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

சித்த மருத்துவ மருந்துகள் தயாரிப்பதற்குவேண்டிய சரக்குகளை பெற்றுக்கொள்ளமுடியாது அவை அருகி வருவதும் அவற்றின் விலைகள் கட்டுக்கடங்காது ஏறிக்கொண்டு வருவதும் முக்கிய காரணங்களாகும்.

சித்த மருத்துவ மருந்துகள் தயாரிப்பதற்கு தேவையான மூலிகைச் செடிகளைப் பாதுகாத்து அவைகளைச் சந்தைப்படுத்தும் வசதியையும் சமூகசேவைஸ்தாபனங்கள் முன் வந்து செய்தல்வேண்டும். எண்ணெய் வகைகளைத் தயாரிக்கும் மூலப்பொருட்களான வேப்பம்விதை இலுப்பம்விதை, ஆமணக்கம்விதை, புங்கம்விதை என்பவற்றையும் மூலிகைச் செடிகளையும் இலகுவாக நியாய விலைக்கு வைத்தியர்கள் பெறக்கூடிய ஒழுங்குகளை இப்போது மூலிகைச் சந்தைமூலம் பெறக்கூடிய வாய்ப்பைக் காணக்கூடியதாக உள்ளது.

# செய்தித் சிதறல்

★ மட்டக்களப்பு, வாகரை பகுதிகளில் இருக்கின்ற அகதிகள் முகாம்கள் மூடப்படவிருப்பதாக தெரிய வருகின்றது. இம்முகாம்களில் சுமார் 10,000 அகதிகள் இருக்கின்றனர்.

★ தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பினால் யாழ்நகரில் தடுத்து வைக்கப்பட்ட இராணுவ வீரர்களை விடுவிக்கக்கோரி தென்னிலங்கையில் ஒரு லட்சம் கையெழுத்துக்களை திரட்டும்பணியினை அவர்களின் உறவினர்கள் ஆரம்பித்துள்ளனர்.

★ தலைமன்னார் கடற்கரையில் பதினேழு பேரின் சடலங்கள் கரை ஒதுங்கி உள்ளன.

★ இந்தியாவில் தங்கியிருக்கும் 1,28,500 அகதிகள் நலனுக்காக இந்தியா இதுவரை பத்துக்கோடி ரூபாவைச் செலவு செய்துள்ளதாம்.

★ யாழ் பல்கலைக்கழகத்தின் மூன்றும் வருட மாணவன் அ. விஜிதரன் (வயது 23) என்பவர் காணாமல் போனதையடுத்து, பல்கலைக்கழக மாணவர்கள் வகுப்புகளைப் பகிஷ்கரித்துவருகின்றனர்.

★ யாழ் மத்திய கல்லூரி மாணவ தலைவன் விபுலானந்தன் பாடசாலை நேரத்தில் இராணுவத்தினரின் துப்பாக்கி வெட்டுக்குப் பலியானான்;

★ இலங்கை அரசாங்கம் புதிய வரவு செலவுத்திட்டத்தில் பாதுகாப்புக்கு 1070 கோடி ரூபா ஒதுக்கீடு செய்துள்ளது.

"யுத்தம நடக்கும்போது கவிஞன் யாழைக் கீழே வைக்கின்றான். சட்ட அறிஞன் சட்டநூல்களையும், மாணவன் பாடப்புத்தகங்களையும் கீழே வைக்கிறான். யுத்தம் முடிந்ததும் கவிஞன் தனது சொந்த ராகத்தைப் பாடுவான்."

—காந்தி.

## தலைமைத்துவம் .......

( 3ம் பக்கத் தொடர்ச்சி )

ஆசியநாடுகளிலும் சமீபகாலத்தில் பல குழப்பங்கள் தலைமைப்பிரச்சனையால் எழுந்திருப்பதைக் காணலாம். தொழிலாளர்களைத் தலைவர்கள் பிழையான முறையில் வழிநடத்திக் குழப்பங்கள் ஏற்படுகின்றன.

நல்லமுறையில் தலைமைத்துவத்தை வளர்ப்பதற்கு சிறுபிள்ளைக்காலம் தொட்டே பெரியவர்கள் விடாமுயற்சி எடுக்கவேண்டும். பிள்ளைகளுடைய தலைமைத்துவ இயல்பூக்கங்களை நல்வழிப்படுத்தி நல்லமுறையில் அவர்களை வளர்த்தல் அவசியமாகிறது.

சமூகவிரோதமான தலைமைத்துவம் வளர்வதற்கும் இடமுண்டு. அமெரிக்கா, ஐரோப்பா போன்ற கண்டங்களில பெரும்கொள்ளைக் கூட்டத்தலைவர்கள் பலவித நாசவேலைகள் செய்து பணம் திரட்டுவதோடு பிரசித்தம் பெற்றுவிடுகிறார்கள். இவ்வாறே இரண்டாம் உலக மகாயுத்த காலத்தில் ஹிட்லர், முசோலினியும் ஏகாதிபத்தியத் தலைவர்களாக விளங்கினார்கள்.

உளவியல் ரீதியாக நோக்கும்போது தலைமைத்துவம் என்பது எல்லாமனிதர்களிலும் ஏதோ ஒரு அளவில் இருக்கும். அவர்களுடைய வளர்ப்புமுறை, சுற்றாடல், நண்பர்கள் மனத்தாக்கங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து தலைமைத்துவத்தை வளரச்செய்கிறது. நெப்போலியன் பிரான்ஸ் தேசத்து ஒரு பிரசித்தபெற்ற தலைவர். இவர் உயரத்தால் குள்ளமானவர். சிறுபிள்ளையாக இருந்தகாலத்தில் நெப்போலியனை எல்லோரும குள்ளன் என்று பரிகாசம் செய்தார்கள். இந்த அவதூற்றத்தையும் இந்தப் பரிகாசத்தால் ஏற்பட்ட மனத்தாக்கம் காரணமாக தான் உலகத்தை ஆட்டிப்படைப்பேன என்ற தீர்மானத்தை எடுத்து 1789ம் ஆண்டு தொடக்கம் 1985ம் ஆண்டுவரை ஐரோப்பிய மக்களை நடுங்கச் செய்தான். ரூசியாமீதுகூட படை எடுத்தான். இதிலிருந்து தலைமைத்துவ வளர்ச்சிக்கு மனத்தாக்கங்களும் காரணமாகின்றன.

ஆன்மீக ரீதியான தலைமைத்துவம் என்றும் ஒருவித தலைமைத்துவம் உண்டு. உயர்ந்த மனப்பாங்குடன் பக்தி நிலையால் ஏனைய மக்களைவிட உயர்ந்த மனிதர்கள் உலகத்தில் தோன்றுகிறார்கள். இவர்களுடைய மனத்தூய்மை, உயர் இலட்சியம் பக்திநெறி ஆகியவற்றால் சமுதாய மக்கள் கவரப்படுகிறார்கள். மக்களை நல்வழிப்படுத்தவும், ஒழுக்கததில் சிறக்கவும் இம்மையிலும் மறுமையிலும் நிம்மதி அடையக்கூடிய தூயவழிகளை இவர்கள் மக்களுக்கு காட்டுவதினாலும் தலைவர்களாகிறார்கள் வரலாற்றில் பல மதங்களிலும் இவ்வாறு தலைமைத்துவம் அடைந்தவர்களைக் காணலாம். இராமகிருஷ்ண பரமகம்சர், சுவாமி விவேகானந்தர், புத்தர்பெருமான் போன்றவர்கள் இந்த வகையைச்சார்ந்தவர்களாவர்.

மக்களுக்குச் சேவையாற்றி அவர்களுடைய இன்னல்களைப் போக்கி உலகத்தில் பலர் தலைவர்களாகியுள்ளார்கள். புளோரென்ஸ் நைட்டிங்கேல் (Florence Nightingale) போன்ற பெண்கள் போர்களத்தில் சேவை மூலம் தலைமைத்துவமடைந்தவர்கள். இன்று உலகம் புகழ் செஞ்சிலுவைச்சங்கம் இவர்களுடைய சேவையின் சின்னமாக விளங்குகிறது.

அரசியல் தலைவர்களுள் விடுதலை வீரர்களும் தலைமைத்துவம் வாய்ந்தவர்கள். அறவழி மூலம் ஒரு செயல் வீரனாகத்திகழ்ந்து உலகத்துக்கே தூய்மையான இலட்சியங்களைச் சாதிக்கலாம் என்று மகாத்மா காந்தி எடுத்துக்காட்டினார். சத்தியசோதனையை விஞ்ஞானரீதியாக ஆற்றிய பெருமை அவருக்கே உண்டு. தலைவனுக்கு கடவுள் பக்தி இன்றியமையாதது என்பதை தனது வாழ்க்கையிலே எடுத்துக்காட்டி உலகத்தில் தலைசிறந்த தலைவனாக வழிகாட்டிய பெருமை மகாத்மா காந்தி அவர்களுக்கேயுரியது.

## காந்தியின் அமுத மொழிகள்

❋ அன்பு வாழ்வின் நியதியாக இருந்தால் சாவின் மத்தியில் வாழ்வு தொடர்ந்து இருக்க இயலாது.

❋ வலிமை உடல் பலத்தால் அல்ல மன உறுதியில் இருந்தே உண்டாவது.

❋ வீரனுக்கு போராடுவதே வெற்றிதான் ஏன் என்றால் அதில்தான் மகிழ்ச்சியடைகிறன்.

❋ ஒழுக்கம் தவிர்ந்ததும் அன்பு நஞ்சாக மாறிவிடும்.

❋ பொய்யும் பலாத்காரமும் இரட்டைச் சகோதரிகள்.

## காந்தியப்பண்ணை

சிங்கைநகர் ஒருங்கிணைந்தமாதிரிப் பனந் தோட்டக்காணியில், 50 ஏக்கர் நிலத்தை பனை அபிவிருத்திச்சபை அறவழிப்போராட்டக் குழுவின் உத்தேச காந்தியப் பண்ணைத் திட்டத்துக்கென வழங்கியுள்ளது.

இக்காணியில்அறவழிப் போராட்டக் குழு மாதிரிக் காந்தியப் பண்ணை ஒன்றினை அமைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்துவருகின்றது.

இப்பண்ணையில் மரமுந்திரிகை, பனை, மற்றும் ஆயுர்வேத மூலிகைக் கன்றுகளையும் குழு நாட்டவிருக்கின்றது.

## பனம் கைப்பணிப் பயிற்சி

பெண்களுக்கான பனம் கைப்பணிப் பயிற்சி வகுப்பு ஒன்றினை அறவழிப் போராட்டக் குழு பனை அபிவிருத்திச் சபையின் ஆதரவுடன், அறவழி பணிமனையில் இம்மாதம் 5ம் திகதி முதல் ஆரம்பித்துள்ளது.

இப்பயிற்சியில் 20 பெண்கள் பயிற்சி பெற்றுவருகின்றனர். இப்பயிற்சியில் விசேடமாக பனை ஓலையில் புத்தகம், வாழ்த்துமடல்கள், பெயர் அட்டைகள் போன்றவை தயாரித்தல்பற்றிப் பயிற்சியளிக்கப்படும்.

## சிந்தனைக்குப் பத்து இல: 2

சிந்தனைக்குப் பத்து இல: 2க்குரிய வினைக்கள் இங்கே தரப்பட்டுள்ளன. இவற்றுக்கான தங்களின் விடைகளை தபால் அட்டையிலோ அல்லது தபால் உறையிலோ விருப்பம்போல அனுப்பிவைக்கலாம். இங்கே கொடுக்கப்பட்ட முகவரி ஒட்டப்பட்ட பதில்களே கவனத்துக்கு எடுக்கப்படும்.

இவற்றுக்கான பதில்களை 15-12-86க்கு முன் அனுப்பிவைக்கவும்.

சிந்தனைக்குப்பத்து இல: 1, இல: 2க்கான பரிசு பெற்றவர்களின் விபரம் அறவழி இதழ் 8ல் பிரசுரிக்கப்படும்.

சிந்தனைக்குப்பத்து இல: 2க்கான கேள்விகள் இதோ! தங்களின் ஞாபக சக்தியை மீட்ட அறவழி வழங்கும் ஒரு அரிய சந்தர்ப்பம் பயன் படுத்தவும்!

1. தந்தை செல்வாவின் நினைவுத்தூபி எப்போது நிறுவப்பட்டது?
2. 1945ல் கொல்லப்பட்ட இத்தாலிய சர்வாதிகாரி யார்?
3. மகாத்மா காந்தியின் சிதைக்கு தீமூட்டியவர் யார்?
4. திருவள்ளுவர் திருக்குறளை எழுதுவதற்கு பாவித்த உபகரணங்கள் எவை?
5. நோர்வே, சுவீடன். டென்மார்க் முதலிய நாடுகளுக்கான பொதுப் பெயர் எது?
6, ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுகநாவலர் பிறந்த இடம் எது?
7. முதலாவது அனைத்துலக தமிழாராய்ச்சி மகாநாடு எங்கு? எப்போது நடைபெற்றது?
8. கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு பெருமளவில் தமிழர்கள் கப்பலில் வந்த ஆண்டுகள் எவை?
9. கைதடிக்கும் யாழ்ப்பாணத்திற்குமான வாகனப் போக்குவரத்து பாதையின் இடைவெளி கூடியிருப்பதன் காரணம் என்ன?
10. அறவழி 7வது வெளியீட்டில் அறவழி என்ற சொல் எத்தனை முறை வருகிறது?

விடைகள் அனுப்பவேண்டிய முகவரி:

**சிந்தனைக்குப் பத்து இல: 2**
அறவழி
அஞ்சல் பெட்டி எண் 2
சாவகச்சேரி

# எதிர்கால தலைமைத்துவம் இன்றைய குழந்தைகளின் ஆரோக்கியத்தில் தான் உள்ளது

"தமிழ் சமுதாயத்தின் எதிர்கால தலைமைத்துவப் பணியினை முன்னெடுத்துச்செல்லக் கூடிய இன்றைய தமிழ்க்குழந்தைகளை நாம் திட்டமிட்டு, வழிநடத்துவதுடன் ஆரோக்கியமாக வளர்ப்பதிலும் மிகவும் பொறுப்புணர்வுடனும் தூரப்பார்வையுடனும் செயலாற்ற வேண்டிய காலகட்டத்தில் ஒவ்வொரு தமிழ்க் குடும்பமும் இன்று உள்ளது. இக்குழந்தைகளுக்கான போசாக்கு உணவுகளை வழங்குவதில் நாம் பெருமளவு கடமை உணர்வுடன் செயல்படவேண்டும். பெரும் பொருட்களைக் செலவு செய்து போசாக்கு உணவுகளை வழங்குவதிலும்பார்க்க, எம்மத்தியில் காணப்படுகின்ற இயற்கையான போசாக்கு உணவுகளைப் பயன்படுத்தும் பக்குவத்தையும் — பழக்கத்தினையும் ஏற்படுத்திக்கொள்ளல்வேண்டும்.

இவ்வாறு, அறவழிப் போராட்டக் குழுவின் கல்விப்பணி இயக்குனர் திரு. வீ. எஸ். துரைராஜா, கைதடி சித்தமருத்துவ பீடத்தில் ஏற்பாடு செய்து நடாத்திய போசாக்குணவு தினக்கூட்டத்தின்போது தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் சித்த மருத்துவ பீடாபதி டாக்டர் எஸ். பவானி உரையாற்றுகையில்,

"யுத்தகாலம் போன்ற ஒரு காலகட்டத்தில் வாழும் நம் சிறுர்களின் உடல், உள தாக்கங்கள்பற்றி அதிகம் சிந்தித்து செயல்பட வேண்டும். இத்தாக்கங்களினுல் பாதிக்கப்படாதிருப்பதற்கு போசாக்குணவுகள் மிக அவசியமாகும். நமது மத்தியில் காணப்படும் மூலப்பொருட்கள்மூலமே அவற்றைத் தயாரிக்கமுடியும். நாளைய தலைவர்களான எம் சிறுர்களை வளர்த்தெடுக்க இது விடயத்தில் அனைவரும் அக்கறை எடுக்கவேண்டும் என்ருர்.

யாழ். திட்டமிடல் உதவிப்பணிப்பாளர் திரு. எஸ். பாலகிருஸ்ணன் உரையாற்றுகையில், "போசாக்குணவுபற்றிய அறிவு மக்கள் மத்தியில் குறைவாகவே இருக்கிறது. இங்குள்ள தாவரங்களில் இருந்தே இவற்றை நாம் பெறமுடியும். பால் மாவகைகள் விலை ஏற்றம் இவற்றை நாம் பெறுவதில்ஏற்படும் சிரமங்கள் இவைகளை நோக்கும்போது போசாக்கு உணவுக்கு நமது சூழலில் உள்ளவற்றை முழுமையாகப் பயன்படுத்த முன்வரவேண்டும்" என்ருர்.

கூட்டமுடிவில் 100 சிறுவர்களுக்கும், பெற்ருேர்களுக்கும், குழுவினுல் தயாரிக்கப்பட்ட போசாக்கு உணவு வழங்கப்பட்டது.

---

**தமிழ் சிறுவர் தினம்......**

( 1ம் பக்கத்தொடர்ச்சி )

கள், சிறுவர் ஊர்வலம், சிறுவர் பொதுக் கூட்டம். சிறுவர் கலை நிகழ்ச்சி, சிறுவர்பிரார்த்தனை போன்ற நிகழ்ச்சிகளில் ஈடுபடுவர்.

கூடவே அன்று தினம், சிறுவர்களைக் குதூகலிக்கும். தமிழர் கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கும் இசைநிகழ்சசிகளும் நடாத்தப்படும்.

இத்தினம் தொடர்பாகக் குழு விரிவான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது.


அறவழி

## சந்தா விபரம்

**உள்நாடு:**

ஒரு வருடம் ரூபா 24-00
(தபாலில்) ரூபா 30-00
தனிப்பிரதி ரூபா 2-00

**ஐரோப்பிய நாடுகள்**

1 வருடம் ரூபா 130-00
(தபால் செலவு உட்பட)

அமெரிக்கா / கனடா

1 வருடம் ரூபா 150-00
(தபால் செலவு உட்பட)

**தொடர்பு கொள்ளவும்:**

ஆசிரியர்
அறவழி
த. பெ. எண் : 2
சாவகச்சேரி.


இப்பத்திரிகை அறவழிப் போராட்டக் குழுவினுல், யாழ். புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1986 கார்த்திகை 25ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.